வால்பாறை நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் ஏப்ரல் மாதம் 29.04.2022-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 12:30 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

முன்னிலை : திருமதி.செ.அழகுசுந்தரவள்ளி
நகர்மன்ற தலைவர்

**பொருள் :1**

வால்பாறை நகராட்சி மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து தரம் உயர்த்தப்பட்டு தேர்வு நிலை நகராட்சியாக 2010 முதல் இயங்கி வருகிறது. இந்நகராட்சி 217.87 ச.கிமீ பரப்பளவு கொண்டதாகும். இந்கராட்சிக்குட்பட்ட பகுதிகள் மேடுபள்ளங்கள் நிறைந்த மலை பிரதேசமாக உள்ளதால் பொது சுகாதார மேலாண்மை பணிகள், வடிகால் பணிகள், தெருவிளக்கு பணிகள், குடிநீர் விநியோக பணிகள், சாலை மேம்பாட்டு பணிகள், அத்தியவசிய பணிகள், கட்டிட பணிகள் மற்றும் ஆக்கிரமிப்பு பணிகள் ஆய்வு செய்ய நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோர் தள ஆய்வு செய்யவும் நகர்மன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் புகார்களுக்கு உடனுக்குடன் பொதுமக்களிடமிருந்து புகார் வராதவண்ணம் சுணக்கமின்றி பணி செய்திடவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை அவர்களின் ஆய்வு கூட்டத்திற்கு செல்ல வேண்டி இருப்பதால் மொத்தம் நான்கு வாகனங்கள் தேவைப்படுகிறது. இந்நகராட்சியில் மொத்தம் மூன்று வாகனம் உள்ளது. அதில் Scarpio வாகன எண்.TN41 AZ 4151 ஆணையாளர் அவர்களும், பொலிரோ வாகன எண்.TN41 AF 9412 சுகாதார ஆய்வாளர் அவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். வாகன எண்.(TN41Q5751 மகேந்திரா பொலிரோ ஜீப்) வாங்கி 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால் அந்த வாகனத்தை கழிவு செய்யவும், புதியதாக "**Scarpio**" வாகனம் ஒன்று நகர்மன்றத் தலைவர் அவர்களுக்கும், "**பொலிரோ**" வாகனம் ஒன்று நகராட்சி பொறியாளர் அவர்களின் உபயோகத்திற்கும், மொத்தம் இரண்டு வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.35.00 இலட்சத்திற்கும் மற்றும் கூடுதலாக செலவினம் ஏற்படின் அதற்கு அனுமதி கோரியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி வேண்டி கருத்துரு கடிதம் அனுப்பி வைக்க மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது அனுமதிக்கலாம்

கோப்பு எண்.376/2022/இ1

**நகர மன்ற தீர்மானஎண். 94 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :2**

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு 2022-2023ம் ஆண்டிற்கு தேவையான உணவு பொருட்கள், சமையல் எரிவாயு, டோக்கன் ரசீதுகள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்திற்கு ஏற்படும் உத்தேச செலவின தொகை ரூ.24.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி ஏற்படும் செலவினத் தொகை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 95 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 3

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 6-வது பகுதியில் உள்ள உருளிக்கல் பகுதியில் உள்ள பாரஸ்ட் செக்போஸ்ட் பின்புறம் மயானக்கூரை சேதமடைந்துள்ளதால் மராமத்து பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.இதனை மராமத்து பணி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | உருளிக்கல் பகுதியில் உள்ள பாரஸ்ட் செக்போஸ்ட் பின்புறம் மயானக்கூரை மராமத்து பணி செய்தல் | 400000 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 96 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :4

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 6-வது பகுதியில் உள்ள உருளிக்கல் பகுதியில் உள்ள மாரியம்மன் கோவில் அருகில் பயணிகள் நிழற்குடை சேதமடைந்துள்ளதால் மராமத்து பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.இதனை மராமத்து பணி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | உருளிக்கல் பகுதியில் உள்ள மாரியம்மன் கோவில் அருகில் பயணிகள் நிழற்குடை மராமத்து பணி செய்தல் | 400000 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 97 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 5

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 6-வது பகுதியில் உள்ள பெரியார் நகர் மருதம் வீடு அருகில் நடைபாதை மற்றும் கால்வாய் அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதனை அமைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | பெரியார் நகர் மருதம் வீடு அருகில் நடைபாதை மற்றும் கால்வாய் அமைத்தல் | 700000 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 98 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 6

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 7-வது பகுதியில் உள்ள மயூரா பேக்டரி முதல் ஷேக்கல்முடி பயணிகள் நிழற்குடை வரை சாலை குறுகிய சாலையாக உள்ளதால் சாலையை அகலப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. இதனை அமைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | மயூரா பேக்டரி முதல் ஷேக்கல்முடி பயணிகள் நிழற்குடை வரை வாலை அகலப்படுத்துதல் | 950000 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 99 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :7

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 7-வது பகுதியில் உள்ள முருகாளி மட்டம் பகுதியில் மயானகூரை இல்லாத காரணத்தினால் பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. இதனை புதிதாக கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | முருகாளி மட்டம் பகுதியில் மயானகூரை கட்டுதல் | 900000 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 100 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 8

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 6-வது பகுதியில் உள்ள பெரியார் நகர் முத்துச்சாமி வீடு அருகில் உள்ள தண்ணீர் தொட்டி முற்றிலும் சேதமடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் தடைபட்டுள்ளது. இதனை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர குடிநீர் தொட்டி பழுதுபார்க்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. இதனை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | பெரியார் நகர் முத்துச்சாமி வீடு அருகில் உள்ள தண்ணீர் தொட்டி பழுதுபார்த்தல் | 200000 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 101 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 9

வால்பாறை நகராட்சியானது வளர்ந்து வரும் நகராட்சிகளில் ஒன்றாகும். 2011ம் ஆண்டின்படி மக்கள் தொகை 70859 ஆகும். தற்போதைய மக்கள் 70859 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு 217.88 ச.கி.மீ கொண்டு 21 வார்டுகள் உள்ளடக்கியதாகும். இந்நகரில் 19539 குடியிருப்புகளும் 1084 வர்த்தக நிறுவனங்களும் உள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 6.5 மெட்டிரிக் டன் அளவு திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலான்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை சேகரித்து முதன்மை சேகரிப்பு பணி மற்றும் முறைப்படி உரம் தயாரித்தல் பணி நடைபெற்று வருகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.482/2018/பி3 ல் வெளியிட்டுள்ள அளவுகோல் படி தூய்மை பணியாளர்கள் தேவை கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ள கணக்கீட்டின் வால்பாறை நகராட்சியில் 129 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது இந்நகராட்சியில் 38 நிரந்தர பணியாளர்கள், ஒரு தூய்மை பணி மேற்பார்வையாளர் மற்றும் 1 ஓட்டுநர் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இந்நகராட்சியில் திடக்கழிவு மேலான்மை பணிகள் செவ்வனே செய்ய தேவைப்படும் 91 தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள் 6 மற்றும் 9 தூய்மை பணி மேற்பார்வையாளர்களை வெளிகொணர்வு அடிப்படையில் பணியமர்த்திகொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 91 தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள் 6 மற்றும் 9 மேற்பார்வையாளர்களுக்கான தினக்கூலி கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

தூய்மை பணியாளர்கள் செலவினங்கள் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| **1)** | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.482/2018/பி3 ன்படி தூய்மை பணியாளர்களுக்கான தினக்கூலி | : | ரூ.**461/–** |
| | ஒரு தூய்மை பணியாளருக்கு ஒரு ஆண்டுக்குரிய கூலி (ரூ.461x365) | : | ரூ.**168265/–** |
| | EPF - 12% | : | ரூ.**20192/–** |
| | ESI - 3.25% | : | ரூ.**5469/–** |
| | EDLI - 0.5% | | ரூ.**841/–** |

| | | | |
|---|---|---|---|
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய தொகை | : | ரூ.1500/– |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 7% | : | ரூ.11778/– |
| | மொத்தம் | : | ரூ.208045/– |
| | 91 தூய்மை பணியாளர்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய செலவினம் (ரூ.208045x91) | : | ரூ.18932095/– |

**மேற்பார்வையாளருக்கான செலவினங்கள் விபரம்.**

| | | | |
|---|---|---|---|
| 2) | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.482/2018/பி3ன்படி தூய்மை பணி மேற்பார்வையாளர்களுக்கான தினக்கூலி | : | ரூ.708/– |
| | ஒரு தூய்மை பணி மேற்பார்வையாளருக்கு ஒரு ஆண்டுக்குரிய கூலி (ரூ.708x365) | : | ரூ.258420/– |
| | EPF – 12% | : | ரூ.31010/– |
| | ESI – 3.25% | : | ரூ.8399/– |
| | EDLI - 0.5% | | ரூ.1292/– |
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய தொகை | : | ரூ.1500/– |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 7% | : | ரூ.18089/– |
| | மொத்தம் | : | ரூ.318710/– |
| | 9 தூய்மை பணி மேற்பார்வையாளர்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய செலவினம் (ரூ.318710x9) | : | ரூ.2868390/– |

**ஓட்டுநர்களுக்கான செலவினங்கள் விபரம்.**

| | | | |
|---|---|---|---|
| 3) | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.482/2018/பி3 ன்படி ஓட்டுநர்களுக்கான தினக்கூலி | : | ரூ.708/– |
| | ஒரு ஓட்டுநருக்கு ஒரு ஆண்டுக்குரிய கூலி (ரூ.708x365) | : | ரூ.258420/– |
| | EPF – 12% | : | ரூ.31010/– |
| | ESI – 3.25% | : | ரூ.8399/– |
| | EDLI - 0.5% | | ரூ.1292/– |
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய தொகை | : | ரூ.1500/– |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 7% | : | ரூ.18089/– |
| | மொத்தம் | : | ரூ.318710/– |
| | 6 ஓட்டுநர்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய செலவினம் (ரூ.318710x6) | : | ரூ.1912260/– |
| | மொத்த செலவினம் (1 + 2 + 3 ) | | ரூ.23712745/– |

அதற்கான ஒரு வருடத்திற்கான செலவினம் ரூ.**273.13** இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி கிடைத்தப்பின் வெளிகொணர்வு முகமையைத் தேர்வு செய்வதற்கான ஒப்பந்தபுள்ளி கோரவும், அதுவரை மே மாதம்

தொடங்கி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி கிடைக்கும் வரை உள்ள காலத்திற்கு ஏற்கனவே பணியாளர்களை வழங்கிவரும் ஒப்பந்ததாரர் அல்லது சுய உதவி குழுவின் மூலம் பெற்று பணி செய்யவும் மன்ற அனுமதி **வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 102 அனுமதிக்கப்படுகிறது.**

நகர்மன்ற தலைவர்
வால்பாறை நகராட்சி